(செய்தித்தாளாகப்பதிவுசெய்யப்பட்டது)

விலை அணா 2

கண்ணகி

தேசிய தீவிர மாதமிருமுறை

எல்லா அதிகாரமும் மக்களுக்கே - நேதாஜி

ஒலி 4) மதுரை. மன்மத - ஆவணி 1 (17—8—55) (அலை 6

19 AUG 1955

விலங்கறுத்த நாள்

கட்டபொம்மனின் முதல் முழக்கமும், நேதாஜியின் கடைசி முழக்கமும் சேர்ந்து இந்தியாவின் அடிமை விலங்கை அறுத்து, அதை முழுச் சுதந்திரமாக்குமுன், வெள்ளையர் இந்தியாவிற்கு அரைச் சுதந்திரத்தைக் கொடுத்தனர் 1947–ஆகஸ்ட்—14–ம் நாள் நள்ளிரவில்!

முழுத்தியாகம் செய்தநமக்கு அரைச்சுதந்திரம் கிடைத்து 2920–நாட்கள் விடிந்து முடிந்துவிட்டன! 2921ம் நாளை ஆகஸ்ட் 15ல், அல்வாவுக்குத் தொட்டுக்கொள்ள ஜீனி கேட்கிற காங்கிரஸ்காரர்கள் கொண்டாடினார்கள்—சுதந்திரத்தை வாங்கிக்கொடுத்த மக்கள் இருந்த இடத்தில் இருந்து கொண்டே வேடிக்கை பார்த்தனர். அவ்வளவு அலுப்பு—மக்களுக்கு—இந்தச் சுதந்திரத்தில்!

ஏனெனில், பிறந்து 2920 நாட்கள் முடிந்த இந்தச் சுதந்திரம் மக்களுக்குக் கேப்பைக் கூழ் வசதியைக்கூடக் கொடுக்கவில்லை. ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கு அல்வாவுக்குத் தொட்டுக்கொள்ள ஜீனிகேட்கும் அளவுக்கு எதுக்களிப்பை ஏற்றிவிட்டிருக்கிறது.

இந்தச் சுதந்திரத்தின் எட்டு வருடச்சாதனை அதுதான். இதனால்த்தான் இச்சுதந்திரத் திருநாள் பப்பர்மிட்டாய்த்தரத் தோடேயே இன்னும் நிற்கிறது. எனவே இந்த விலங்கறுத்த நாளை உண்மையான—பூரண சுதந்திரத் திருநாளாக மக்கள் சக்தி முழுதும் கொண்டாட வேண்டியகாலம் ஒன்று எதிரே நின்று மின்வெட்டுகிறது. அந்நாளை விடியவைக்க மக்கள்சக்தி ஒருமுனைப்பட வேண்டும். அன்றுதான் இந்திய சுதந்திரத் திருநாளின் தரத்தை உலகம் மதிக்கும்!

ஏன் இந்த சண்டித்தனம்?

கோவாவில் போர்ச்சுக்கல் முரடர்கள் மிருகத்தனத்தின் கரையையே கடந்து விட்டனர்!

கற்பழிப்பதிலிருந்து, உயிர் பறிப்பதுவரை சர்வ சகஜமாகிவிட்டது அங்கு!

இந்நிலையிலும் காங்கிரஸ்ஆட்சி, போர்ச்சுகல் ஆட்சியை வெளியேற்ற நேரடி நடவடிக்கையில் இறங்காதாம். எத்தனை வருடங்களானாலும் சமாதானப் பாதையைத்தவிர வேறுபாதையில் இறங்கி கோவாவுக்கு விடுதலையை ஈட்டாதாம் இந்திய சர்க்கார்!

இவ்வளவு சண்டித்தனம் புரிவதின் காரணம் விளங்கவில்லை.

கோவா இந்தியாவின் ஒருபகுதிதான் என்பதில்க்கூட இந்தியா வேறுபடுகிறதா? அன்றி போர்ச்சுக்கல் முரட்டர்கள் நடத்தும் எமதர்மன் நாடகத்தை அநுமதித்து இந்தியாவில் ஜனத்தொகையைக் குறைக்க நினைக்கிறதா? [4-ம் பக்கம் பார்க்க]

கிடக்கிட

ப. குப்பையாண்டி—சென்னை.

கே:— பார்வார்டு பிளாக் கட்சியின் கொள்கை யாது?

ப:— அதிகாரத்தை எல்லாம் மக்களின் உடமையாக்குவது.

கரு. கோவிந்தன்—செல்லணக்கவுண்டன்பட்டி.

கே:— பதவிக்குவருமுன், அன்பும் ஆசையும் காட்டுபவர்கள், பதவிக்கு வந்தபின் முட்டாள்களாய் விடுகிறார்களே ஏன்?

ப:— முட்டாள்தனதுக்கும், பதவி-க்கும் காதலோ என்னவோ!

கே:— கோவில்களில் காமவலைவீசும் வேதாந்திகளை என்னவென்றழைப்பது?

ப:— கழுதைகள் என்று.

கே:— கண்ணகி வருடச்சந்தா எவ்வள?

ப:— நான்கு ரூபாய்.

அ. சங்கரலிங்கம்—நெடுங்குளம்,

கே:—கிருஸ்து மத போதனை, நம் நாட்டில் செய்யப்படுவது போன்று அரபுநாடுகளில் செய்யப்படுகின்றதா?

ப:— இல்லை. அங்கு இஸ்லம் மதம் சுயமரியாதையோடியங்குகிறது.

கே:— சொந்த மதத்தை நிந்திப்பதில் நம்மவர்கள்போல் பிறநாட்டில் உண்டா?

ப:— கிடையாது.சொந்தமதத்தை நிந்திப்பது ஒருநாகரீகம் என்று கூடக் கருதும் சில புத்திசாலிகள் இங்கு உண்டு. ஆனால் வேறு எந்த நாட்டிலும், இத்தகைய புத்திசாலிகள் இல்லை.

சேவு. ராம.ராம. சேவுகன் செட்டியார்—மதுரை.

கே:— இளமையில் இன்முகம் காட்டியவர், வாலிபத்தில் வசைமாறி பொழிவது தான் இயல்பா?

ப:— இயல்பு எதுவுமில்லை. எல்லாவற்றிற்கும் அடிப்படை பணமும், சுயநலக் குணமும் தான்.

கோ. சந்திரா—மயிலாப்பூர்.

கே:— ஒரு பெண் கம்யூனிஸ்டாகலாமா?

ப:— கம்யூனிசம் என்பது பொதுவுடமை !எதைதைப் பொதுவுடைமை ஆக்குவது என்பதற்கு வரம்பிருக்கிறது. இதைச் சரிவரத் தெரிந்த பிறகு ஒரு பெண் கம்யூனிஸ்டாவதை-ப்பற்றிச் சிந்திப்பது நல்லது.

● இந்திரா—மதுரை.

கே:— திருவள்ளுவர் விரும்பியவாறு ஆட்சிநடக்கும் நாடு இன்று உலகில் எதெது?

ப:—ஒன்றுமே இல்லை.

கே. யஸ். மணிராசன்—மதுரை.

கே:— கடலில் அலைகள் எழுவதின் ஆதாரத்தைக் கூறுங்கள்?

ப:— கடலின் ஆழத்தில் ஏறுக்குமாறான முறையில் நீரோட்டம் இருக்கிறது. அந்த ஓட்டத்தில் எழும் அதி-ர்ச்சியும் காற்றும்சேர்ந்து அலைகளை எழுப்புகின்றன.

கே:— பணம் படைத்தோரின் பண்புக்கும் பைத்தியத்தின் பண்புக்கும் என்ன வித்தியாசம்?

ப:— பணம் படைத்தோருக்குள்ள பண்பு "அபாயகரமானது." அதை அழிக்கவும் முடியாது. ஆனால் பைத்தியத்தின் பண்பில்ஆபத்தில்லை—பைத்தியம் நிரந்தர மானதல்ல. ஆகவே பைத்தியத்தின் பண்பைவிட பணக்காரர்களின் பண்பு மோசமானது.

பிச்சத்தேவர்—கோச்சடை.

கே:— நமது அரசாங்கம் சியாங்கேஷேக்கின் அரசாங்கத்தை அங்கீகரி-க்கவில்லை என்று சொல்லிக்கொண்டு பார்மோசாவில் இயங்கி வரும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பியக்கத்திற்கு 24—பிரதிநிதிகளை இங்கிருந்து செலவிட்டு அனுப்பப் போவதின் மர்மமென்ன?

ப:— இங்கும் சியாங்கேஷேக்கின் சாயல் வீசுவதால்த்தான்.

வா. சந்திரசேகரன்— மாதுங்கா. பம்பாய்.

கே:— சென்னை முதன் மந்திரி காமராசர் சட்டசபை கூடும்போதெல்லாம் வெளியூர் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டு விடுகிறாரே ஏன்?

ப:— அதெல்லாம் விபரம் தெரிந்தவர்கள் விவகாரம்—அதில் தலையிட வேண்டாம்—நமது வேலையைப் பார்ப்போம்—என்றபரந்த நோக்கமாக இருக்கலாம்,

ம. பானு—செங்கற்பட்டு.

கே:— காங்கிரஸ்காரர்களெல்லாம் திராவிட இயக்கங்களில் சேர்ந்துவிட்டால், திராவிட இயக்கங்களின் தொல்லைகள் நீங்குமல்லவா?

ப:—அதெப்படி நீங்கும். காங்கிரஸ்காரர்கள் திராவிட இயக்கங்களில் இணைந்துவிட்டால், திராவிட இயக்கத்தினர் காங்கிரசில் இணைந்து விடுவார்கள். அப்புறமும் தொல்லை. தொல்லைதான்—தொலையாது!

த. தண்டபாணி—நெல்லை

கே:— இன்று கம்யூனிஸ்டுகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

ப:— கதர்ச்சட்டை தைத்துக் கொண்டிருக்கிறார்கள்! சிவப்பு வெளு-த்துவிட்டதல்லவா? இனி வெள்ளை தானே!

எஸ். எம். வத்தூமலை—கரந்தை.

கே:— சோஷலிஸ்டுக் கட்சிக்கு வந்த கேடென்ன?

ப:— அது கிருக்குக் கிருபளானியின் பிரஜாகட்சியோடு இணைந்தது தான்.

● இந்த இதழில் குறிப்பிடத்தக்க கேள்விகேட்டவர் என கருதப்பட்ட கே. இந்திரா 209-வடக்குமாசி வீதி மதுரைக்கு கண்ணகி இதழ் 3—மாதங்கள் வரை அனுப்பப்படும்.

பாகிஸ்தான் கேட்டவனும் முட்டாள்—கொடுத்தவனும் முட்டாள்!

என்று பஸ்லுல் ஹக் சொன்னார்—நடக்கிறது!

உ. முத்துராமலிங்கத் தேவர் எம். எல். ஏ.

பாகிஸ்தான்—முஸ்லிம்களின் முயற்சியின்பால் உருவானது என்று கருதப்பட்டபோதிலும், உண்மை அதுவல்ல.

காங்கிரஸ் காந்தியின் கையில் சிக்கி, காந்தீய அரசியல் வியாபார அரசியலாகமாறியதால் முஸ்லிம் தலைவர்கள் அப்போதைக் கப்போது, சந்தர்ப்பம் கருதி காந்தியால் தேர்ந்தெடுக்கப்படாமல், பொறுக்கி எடுக்கப்பட்டார்கள்.

காந்திஜி, ஆப்பிரிக்காவிலிருந்து பம்பாய்க்குவந்த காலத்தில் முதல் உறவு கொண்டாடியவரும், கூட்டத்தில் கலந்துகொண்டவரும் ஜனாப் ஜின்னா ஆவார்,

காந்திக்கும், ஜின்னாவுக்கும் வெள்ளையனோடு காந்திஜி அநுசரித்துப் போகிற அரசியல் சீர்திருத்தப்பாதையைத் தவிர முழுதும் தேசத்தைப் பறிக்கிற பாதை அல்ல என்று கண்டவுடன் அபிப்ராய பேதம் ஏற்பட்டது.

தன் சமுகத்திற்குரிய நன்மையையும், சலுகையாகப்பெறும் நிர்ப்பந்தம் ஜின்னாவுக்கு வருகிறது. அதன் மேல் ஜின்னாவுக்கு காங்கிரசில்உள்ள தலைமைப்பதவி கைநழுவவிடப்பட்டு, முகமதலி, ஷௌகத்அலி தலைமைக்கு வருகிறது.

அதிலும் இதே நிகழ்ச்சி! அதன் மேல் டாக்டர் கிச்சுலுவின் தலைமைப் பதவி வருகிறது. அவர் தீவிரவாதியாகிறார் என்று கண்டவுடன் அவரிடத்திலிருந்தும் தலைமைப்பதவி நழுவி, டாக்டர் அன்சாரியை நோக்கிச் சென்றது.

அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைமைவகித்த அன்சாரி,

பூரண சுதந்திரத் தீர்மானத்தில் எதிராக நடப்பதற்கு தமது வேண்டுகோளை மறுத்ததால் இது சின்னப்பிள்ளைகள் தீர்மானம் என்று அறிக்கைவிட்ட காந்தி, தலைமைப் பீடத்தை அன்சாரியைவிட்டு விலக்கி அப்பாஸ் தயாப்ஜி என்ற ரிட்டயர்டு ஜட்ஜ் வசம் ஒப்புவிக்கிறார்.

அவரும் விபரம் புரிந்துகொள்கிறார் என்று கண்டவுடன் தலைமைப் பதவியை அவரைவிட்டும் விலக்கி அபுல்கலாம் ஆசாத்தை நாடிச் செலுத்தப்பட்டது.

இத்தனையையும் பார்த்துக் கொண்டும், அநுபவித்துக் கொண்டுமிருந்த முஸ்லிம்கள் ஜின்னாவின் தலைமையில் ஒன்றுகூட ஆரம்பித்தார்கள். அது ஆங்கிலேயனுக்கு நல்ல உதவியாக இருந்தது.

அந்த நிலையில் இந்திய அரசியல் ராணுவப்பாதையின் கேந்திரத்தை அடைந்துவிட்டது. அதன் காரணமாக ஆங்கிலேயனோடு ஒத்துப்போயாவது ராணுவப்பாதை இந்தியாவில் அமையவிடாமற் செய்வதற்கு காந்தி பகீரதப் பிரயத்தனம் செய்தார். **அதுதான் பட்டாபி தோல்வியில் துவங்கி பாகிஸ்தானில் போய் முடிந்தது!**

பாகிஸ்தான் தனி வங்காளமும், தனிப் பஞ்சாபும் எல்லைப்புறம் பலுச்சிஸ்தான் உள்ட ஒருநாடாகக் கிடைக்குமென்று ஜின்னா எதிர்பார்த்தார். முஸ்லிம்களும் நம்பினார்கள். வெள்ளையர்களோ பரம இந்திய சுதந்திர விரோதிகள். ஆகையால் இந்திய முஸ்லிம்கள் தன் சாம்ராஜ்யத்திற்குப் பயன்பட வேண்டுமே தவிர தனித்த சம்ராஜ்யமாக இயங்கக் கூடாது என்று கருத்துக்கொண்டனர். அதன்பலன் வங்காளம் இரண்டாகியது—பஞ்சாபும் இரண்டாகியது! ஜின்னாவுக்கும் சாவு நெருங்கியது! லியாகத் அலிகானின் அரசியல்நுட்ப அறிவு ஆங்கிலேயனுக்கு அபாயத்தை விளைவித்தது. அது, லியாகத்அலியின் கொலையில் முடிந்தது! நாஜிமுத்தீன் தலைமை மீண்டும் அசைய ஆரம்பித்தது. அது முல்லாக்கள் இயக்கத்தைக் கிளப்பி பக்தூனிஸ்தான் கிளர்ச்சிகளை எழுப்பி பல முறையில் ஆங்கிலோ—அமெரிக்க எதிர்ப்பைத் துவக்கியது. அதில் நஜிமுத்தீன் வெள்ளையர் சொற்படி பூராவும் கேட்டு நடக்கத்தவறியதால் டிஸ்மிஸ் செய்யப்படுகிறார். அமெரிக்காவில் ஸ்தானிகராக இருந்த முகமதலி பிரதமராகிறார்!

அதன்மேல் பழைய அரசியல் அப்துல் கபார்கான் வடிவமாய் ராணுவப் பாதையையும், பஸ்லுல்ஹக் வடிவமாய் தேர்தல் பாதையையும் கையாண்டது. ஆப்கன் உதவி, சர்க்கார் நடவடிக்கை அப்துல் கபார்கானுக்குப் பணியும்படி பாகிஸ்தானை நிர்ப்பந்தித்தது.

ஆசிய அரசியல்—மத்திய கிழக்கு நடவடிக்கை—வங்க முசல்மான்களுக்கு உணர்ச்சியை ஊட்டி முஸ்லிம் லீகை முறியடித்தது. என்றாலும் அமெரிக்க ராணுவம் கபார்கானை தன்னாட்டிற்குச் செல்லவிடாமற் தடுத்தும், பஸ்லுல்ஹக்கை வீட்டில் கைதியகா வைத்து கவர்னர் ஆட்சியைக் கொண்டுவந்தும் ஒரு வருடம் மிரட்டிப்பார்த்தது.

உலக நிலையில் அமெரிக்க ராணுவ பலத்தையும் நம்பாத நிலைமைக்கு

[4ம் பக்கம் பார்க்க]

ஜெயப் பிரகாஷுக்கு

மந்திரிப் பதவி

—●—

பிரஜா - சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு அசோக் மேதாவுக்கும், ஜெயப் பிரகாஷ்நாராயண் அவர்களுக்கும் இந்திய மத்திய அரசாங்கத்தில் மந்திரிப்பதவி கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

தோழர் ஜெயப் பிரகாஷை எப்படியும் மந்திரி யாக்கிவிட வேண்டுமென்று நேரு தீவிரம் காட்டுவ தாகவும், இதற்கு விநோபாபாவேயும் இணங்கி விட்டாரென்னும் தெரிகிறது.

டாக்டர் லோஹியா கட்சியை எதிர்த்ததும் அவரை அசோக்மேத்தா கூட்டத்தினர் வெளியேற்றியதும் ஏன்? என்று இப்பொழுது புரிகிறதல்லவா?

———

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வந்த இந்திய முசல்மான்கள் ஒரு தன்னக்கட்டு அரசியலுக்கு வந்தார்கள். அதன் பலன் தான் வங்காளத்தில் பஸ்லுல்ஹக்குக்குப் பணிந்து—கபார்கானுக்குப் பூரண விடுதலை அளித்தது!

அதன் பிறகும் சுரவர்த்தியை வைத்து ஒரு ஆங்கிலோ—அமெரிக்கப் பாதுகாப்பை உண்டுபண்ண எத்தனித்தார்கள். ஐக்கிய முன்னணியோடு சேர்ந்துகொண்டு முகமதலி செய்த ராஜிநாமா, அந்தத் தந்திரத்தையும் பயனற்றதாக ஆக்கிவிட்டது. அதன்பலன்தான் **"பாக்கிஸ்தான் கேட்டவனும் முட்டாள்—கொடுத்தவனும் முட்டாள்"** என்று பிரசங்கம் புரிந்த பஸ்லுல்ஹக் பாகிஸ்தானின் உள்நாட்டு மந்திரியாக உருவெடுத்திருக்கிறார்! இதில் ஆங்கிலோ—அமெரிக்கரின் மேல் நடவடிக்கையும் இந்தியக் காங்கிரசின் எதிர் நடவடிக்கையும் என்னவாகும் என்பதைப் பின்னால் விவரிக்கிறோம்!

ஜெய்ஹிந்த்!

(1—ம் பக்கத் தொடர்ச்சி)

கோவாவைச் சமாதானத்தின் மூலம் தான் விடுவிக்கவேண்டுமென்றால் ஆயிரக்கணக்கான சத்தியாக்கிரஹிகளை போர்ச்சுகல் குண்டர்களின் துப்பாக்கிகளுக்கு இரையாக்குவது ஏன்?

நிலைமையைத் துருவிப் பார்க்கிறபோது போர்ச்சுகல் தடியர்கள் புரியும் கொடுந் தாண்டவத்தைவிட இந்திய அரசாங்கத்தின் சமாதானக்கொள்கை படுமோசமாகச் செயல் படுகிறதென்றே தோன்றுகிறது.

இந்த அசமந்த அரசாங்கத்தை நம்பி கோவாவை விடுவிக்கப்புறப்பட்டுள்ள சத்தியாக்ரஹிகளை ஆண்டவன் தான் காப்பாற்றவேண்டும்.

உலகம் புகழும் நேருவின் இந்தியாவின் ஒருபகுதியில் கொட்டமடிக்கிற போர்சுகலை உலக நாடுகள் ஒன்றுகூட அதட்டவில்லை. ஆனால் நேருவுக்கு உலக அரங்கில் இறக்கை கட்டிப் பறக்கிறதாம் மதிப்பு! ஏனோ இந்த விளம்பரச் சவடால்.

புதுக் காங்கிரசுக்காரர்களே! நீங்கள் அஹிம்சை ஆட்சியா புரிகிறீர்கள்?

உங்கள் ஆட்சிக்கு உலக மேடையில் உள்ள மதிப்பின் விலை என்ன தெரியுமா?

பணம் குவிப்போருக்குப் பாதுகாப்பளித்துக்கொண்டே, நிலசீர்திருத்தம் செய்வதாய்க் கூறுகிற உங்கள் தந்திரம் ஓட்டு வாங்கவா விவசாயிகளை உய்விக்கவா?

சட்டசபையில் 5-8-55ல் பசும்பொன் தேவரவர்கள் அவ்வாறு கேட்டு, மந்திரிகளைத் திணறவைத்தார்கள்.

அன்றையப்பேச்சு அதிகக் காரம் கொண்டிருந்தது. அப்பேச்சு முழுதும் அப்படியே கண்ணகி அநுபந்தமாக 21-8-55ல் புத்தக உருவில் வெளியாகும். பிரதிகளுக்கு முந்துங்கள், ஏஜண்டுகள் தேவை—க்கு எழுதவும்.

இலங்கையில் ஒரு பாகிஸ்தானுக்கு வழி செய்ய வேண்டாம்.

படித்த கொத்தலவாலா பண்போடு நடந்து கொள்ளவேண்டும்!

வெள்ளையனே— வெளியேறு என்று நாம்—இந்தியர்கள் முன்புமுழக்கினோம்; உண்மைதான்.

ஆனால் நாம் முழக்கிய வெள்ளையனே வெளியேறு என்ற பதத்திற்கு, வெள்ளையனை அல்ல வெள்ளை ஆட்சியே வெளியேறு என்பதுதான் பொருள்!

முழக்கத்தின் ஒலி எளிதாய் இருப்பதற்காக வெள்ளை ஆட்சியே வெளியேறு என்பதற்குப் பதில் வெள்ளையனே வெளியேறு என்று கூறினோம்.

வெள்ளையனை வெளியேறச் சொல்லி நாம் என்றுமே கூறியதில்லை—கூறப்போவதுமில்லை.

மனிதவர்க்கம் என்றமுறையில் எந்நாட்டுத் தனி மனிதனையும், எந்த அந்நியநாடும், அம்மனிதன், அந்நாட்டுக்குடிமகனாக விரும்பினால் ஏற்றுக் கொள்ளவேண்டும். அம்முறையில் இந்தியா எத்தனையோ அந்நியநாட்டாரைத் தனது குடிமகனாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

சரியோ, தவறோ சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் ஒரு வெள்ளையன் என்பதையும், இன்று இந்தியாவில் பெரும் தொழில்செய்து பெருவாரியான லாபங்களை அள்ளிச் செல்வது சிறப்பாக வெளி நாட்டார்—குறிப்பாக ஆங்கிலோ— அமெரிக்கர் தான் என்பதையும் உலகம் அறியும்.

இந்நிலையில், இலங்கைப் பிரதமர் கொத்தலவாலா, நமதுவெள்ளையனே வெளியேறு என்ற தீர்மானத்தைக் கோணலும் மாணலுமாக அர்த்தப் படுத்திக்கொண்டு இந்தியனே வெளியேறு என்ற அநாகரிகமான கோஷத்திற்கு முதற்குரல் எழுப்பி இருக்கிறார்.

இந்தியர்கள் வெள்ளையரை வெளியேறச் சொன்னதில் அர்த்தமிருந்ததானால் இந்தியரை இலங்கையை விட்டு வெளியேறும்படி சிங்களவர்கள் சொல்லுவதிலும் அர்த்தமிருக்கிறது என்று புதிய அகராதி ஒன்றையே உண்டாக்கி இருக்கிறார்.

அவர் இலங்கை பிரதிநிதித்வசபையில் ஆகஸ்ட் 4-ல் இலங்கை இந்தியர் குறித்துப்பேசி இருக்கிற பேச்சின் ஒவ்வொரு எழுத்தும் அரக்க நெஞ்சின் இரும்பு இதயத்திலிருந்து தெறித்த மாதிரி இருக்கிறதே தவிர, பகவான் புத்தரின் பான்மை பரவிய இலங்கையின் தலைவர்நெஞ்சிலிருந்து வெளியேறியதாகக் கொள்ள முடியவில்லை.

சுடுவதிலிருந்து கொல்லுவதுவரை முரட்டுத்தனம் பெற்றுவிட்டது கொத்தலவாலாவின் பேச்சு!

இந்தக்கட்டத்திலாவதுதாம்யார்? தமது லட்சியத்தின் லட்சணம் என்ன என்பதை கொத்தலவாலா பகிரங்கப்படுத்தியதற்கு இந்திய சர்க்கார் அல்ல—இலங்கை இந்தியர் நன்றி செலுத்தவேண்டும்.

இலங்கை இந்தியர் விவகாரத்தை, இந்திய சர்க்கார், ஒரு பொழுதுபோக்காகக் கையாண்டு வருகிறதே தவிர உயிர்ப்பிரச்சினையாக அல்ல.

இதைக் கொத்தலவாலா நன்றாய்ப் புரிந்து கொண்டார்—அதன் பலன் தான் அவரைத் துப்பாக்கி தூக்க வைத்திருக்கிறது—இலங்கை இந்தியரைத் தீர்த்துக்கட்ட!

இதில் இலங்கை இந்தியர்நேருவை அளவுக்கு மீறி நம்பியதன் மூலம், கொத்தலவாலாவை இந்த அளவுக்குத் தயாரித்துவிட்டனர்.

நேருவையும், அவரது சர்க்காரையும் தமது பிரச்சினைக்கு ஒரு ஆதரவாகக்கொள்வதற்குப் பதிலாக, தமது பிரச்சினையையே நேருவிடம் ஒப்புவித்து விட்டனர்—இலங்கை இந்தியர்—பலன் பாதகமாய் முதிர்ந்துவிட்டது!

நேருவின் சேவையும், திறமையும், பிரதமத்வமும் பிறநாட்டினருக்குப் பயன்படுமே தவிர சொந்த இந்தியர்களுக்குப் பயன் படவே மாட்டாது என்பது பழகித் தீர்ந்த அநுபவம்.

இதோ கண்முன் நிற்கின்றன— காஷ்மீர், கோவா, தென்னாபிரிக்கா!

இலங்கை இந்தியர்கள் ஆரம்பத்திலேயே பாதை தவறிவிட்டனர்.

அவர்கள், ஆரம்பதசையில், தம்மை அந்நியர்களாகவே ஆக்கிக்கொண்டு நேருவிடம் உதவிக்குப் போயிருந்தால் அவர் இதுவரை எதையேனும் செய்திருப்பார். இலங்கை இந்தியர்கள், தம்மை நேருவின் பிரஜைகளாகவும் இந்தியாவின் பங்காளிகளாகவும் காட்டிக்கொண்டு பிரச்சினையையே நேருவிடம் ஒப்புவித்துவிட்டதால் இலங்கை இந்தியர் பிரச்சினை நேருவிடம் உபரியாகவும், கொத்தலவாலாவிடம் ஒசிப்பொடி மட்டையாகவும் ஆகிவிட்டது.

இனியேனும் இலங்கை இந்தியர் சுயநிலை பெறவேண்டும்.

இலங்கை இந்தியர் பிரச்சினை இலங்கை இந்தியரின் சொந்தப் பிரச்சினை என்று பிரகடனம் விடுத்து ஆவன செய்வது நல்லது. அதற்கு உதவும்படி இந்தியசர்க்காரை வேண்டலாம். இந்திய சர்க்கார் உதவினாலும் உதவாதபோனாலும், பிரச்சினையின் தீர்வுக்குத் தமது சொந்த சக்தியைச் கையாண்டால், ஆண்டவ

ணுவது கருணை பாலிப்பார்—கோரிக்கையில் நியாயம் இருக்கிறபோது வெற்றிக்கு உத்தரவாதமுண்டு!

கொத்தலவாலாவுக்குப் படிப்பு இருக்கிற அளவு பண்பு இல்லை.

ஒருநாட்டி பிரதமருக்குப் படிப்பைவிடப் பண்புதான் முக்கியம். ஆனால் கொத்தலவாலா பண்புக்கு அதிகம் முடை படுகிறார் என்பதை அவருடைய முட்டுத்தனமான பேச்சு எடுத்துக்காட்டிவிட்டது.

தென்னாப்ரிகாவில் ஸ்மட்ஸையும், மலானையும் அங்கு வாழும் இ[illegible]களுக்கு இழைத்த கொடுமைகளை கண்டு (இந்திய அரசாங்கம் அசம[illegible]மாக இருந்தாலும்) மக்கள் கொ[illegible]தனர். ஆனால் அதையும் மிஞ்சிவிட்டது கொத்தலவாலா என் [illegible]

தென்னாப்ரிகாவில் இந்தியர்களை நிற[illegible] தனி இடம் ஒதுக்கிவிட்டு அங்கு வாழும்படிதான் பல [illegible]னர் ஸ்மட்சும் மலானும்! அதையே [illegible]மை என்று கொதித்தோம். ஆனால் [illegible]லங்கை கொத்தலவாலா லங்[illegible] இந்தியர்களை-இலங்கையையே [illegible]கமாகக் கொண்ட [illegible]ழைத் [illegible]தாளர்களை— நாட்டை விட்டே ஓ[illegible]ம்படி கெடுபிடி செய்கிறார் [illegible] என்ன பெயர் கொடுப்பதென்றே [illegible]யவில்லை. பிரிட்ட[illegible] [illegible]யாகவில் [illegible] [illegible] செலுத்துகிறார்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்வர்க்காவின்

சந்திரா

டால்கம்

பௌடர்

மிகச்

சிறந்தது

பஞ்சசீலத்துக்குப் பதில் தசசீலம்!

நேருவுக்கு டல்லஸின் எதிர்ப்பணி

நேருவும், ரஷ்யப் பிரதமர் புல்கானினும் சேர்ந்து விடுத்த பிரகடனம் அமெரிக்கருக்கு ஒரு தீராத குடைச்சலாகி விட்டது.

அந்தக் குடைச்சலில் அவர்கள் நேருவின்மீது கம்யூனிசச் சாயத்தை பூசிப் பார்க்க ஆரம்பித்து விட்டனர்.

நேருவின் பஞ்சசீலக் கொள்கைக்குப் பதிலாக தசசீலக் கொள்கை (தசம் என்றால் பத்து) ஒன்றை அமெரிக்க வெளி நாட்டு மந்திரி டல்லஸ் உண்டாக்கி அதை ஐரோப்பா வெங்கும் நேருவுக்கு கெதிராகப் பரப்பும்படி தமது ஸ்தானிகர்களுக்கு கட்டளையிட்டிருக்கிறார்,

நேரு, யூகோவின் தலைநகரான பெல்கிரேடுக்கு வரும் போது எதிர்ப் பிரச்சாரம் செய்வதாய் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் நாடுகள் திட்டமிட்டிருந்தன — ஆனால் மார்ஷல் டிட்டோ இதற்கு உடன்படவில்லை— ஆயினும் நேருவுக்கு எதிர்புரிவது என்று அம்மூன்று நாடுகளும் நிச்சயித்தன-பின்னர் நேருவின் பஞ்சசீலக் கொள்கையைவிட கூட்டுப் பாதுகாப்பு—தற்காப்பு —பால்கன் உடன்படிக்கை ஆகிய அமெரிக்கத் திட்டங்களுக்கு அதிக ஆதரவு தருவதாய் மார்ஷல் டிட்டோ உறுதி கூறிய பிறகு தான் அவர்கள் நேருவுக்கு எதிர்புரியும் நிச்சயத்தைக் கை விட்டார்களாம்.

எனினும் நேரு மாஸ்கோவிற்கு வசப்பட்டு விட்டாரென்ற சந்தேகம் அமெரிக்கரை விட்ட பாடில்லை. ஆகவே எதிர்ப்பிரச்சாரம் செய்ய லண்டன் நகரில் ஒரு காரியாலயத்தையே உண்டாக்கி இருப்பதாக ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

பிரிட்டனும், பிரான்சும் வல்லரசுகளா?

வல்லரசுகள் என்றால் எத்தகைய தகுதியைக் கொண்டிருக்க வேண்டும் என்ற முறையே முறிந்து போய் விட்டது— ஆங்கிலோ, அமெரிக்கர்களால்!

வல்லரசு என்றால் இதரநாடுகள் எதற்கும் மேம்பட்ட சக்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

இன்று நான்கு நாடுகள் வல்லரசுகள் என்று சொல்லிக்கொண்டு உலகப் பிரச்சினையைச் சொந்தப் பிரச்சினையாக்கிக் கொண்டுவேலை செய்கின்றன.

ஆனால் இந்த நான்கு நாடுகளில் [ரஷ்யா— அமெரிக்கா— பிரிட்டன்—பிரான்சு] எந்தெந்த நாடு வல்லரசு ஸ்தானத்திற்கு லாயக்கு? என்பது ஒரு ரசமான கேள்வி.

ரஷ்யாவும், அமெரிக்காவும், வல்லரசு என்று கொள்ளலாம்— சக்தி இருக்கிறது.

ஆனால் இந்தப் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் என்ன இருக்கிறது— வல்லரசு ஸ்தானத்தை வகிக்க?

பிரிட்டன் இன்று நாலாந்தரமாகி விட்டது, சின்னஞ் சிறிய யூகோப் படைகளை ஏவி விட்டால்கூட பிரிட்டனை 24—மணி நேரத்தில் எப்பம் விட்டுவிட முடியும்.

சாதாரண வியட்மின் குடி படைகளிடம், புறமுதுகு காட்டக்கூடத் தெரியாமல், குதிதெறிக்க ஓடி ஓய்ந்து விட்டது பிரான்சு! போலந்தின் ஒரு டிவிஷன் படையே போதும், பிரான்சைப் பெயர் மாற்ற!

இந்த இரண்டு நாடுகளும் வல்லரசுகளாம். ஆனால் மக்கள் சீனா—ஜப்பான், எகிப்து, போன்ற நாடுகள் வல்லரசுகள் இல்லையாம் பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும், வல்லரசுப் பட்டம் கட்டியது யார்? ஆண்டவன்தான் கேட்க வேண்டும்!

50 ரூபாய்க்கு ஒரு அயோக்கியன்

அவன் ஏழை—யோக்கியனாகத்தான் இருந்தான்—பசி அவனைத் தின்றாலும் நீதியைக் கொல்ல அவன் துணியவில்லை—ஆனால் செல்வரின் பச்சை நோட்டுக்கள் கையில் தாவுகையில் யோக்கியன் அயோக்கியனாக மாறாமல் தீரவில்லை. ஒரு பணக்காரன், பல அயோக்கியர்களை உண்டாக்கி விடுகிறான் பணத்தால்—பாவம்! முடிவில் ஏழைதான் அவஸ்தைப் படுகிறான்...........

"சுப்பா! உன் முடிவை சீக்கிரம் சொல்லு. எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்றார் அண்ணாமலை.

சுப்பன் கல்லுப்பிள்ளையார்போல் அசையாது நின்றான். அவன் மனதில் பெரும் போர் நடந்து கொண்டிருந்தது.

எஜமானர் இட்டிருக்கும் கொடிய வேலையை சற்றும் தயங்காமல் செய்து முடித்தால் அவன் கைக்கு ஐம்பது ரூபாய் சுளை சுளையாக வந்து நிற்கும். அதைக்கொண்டு, அவன் மனைவி, மக்களுக்கு உணவளிக்கலாம். அவர்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் வறுமை என்னும் பாறாங்கல்லின் பளு சற்றுக் குறையும். ஆனால்......

மனச்சாட்சி என்று ஒன்று இருக்கிறதே! பணத்திற்கு ஆசைப்பட்டு அத்தகைய கொடிய செய்கையை புரியலாமா? சீச்சி!......... அவன் மனம் அதற்கு ஒப்பவே ஒப்பாது. வறுமை நோய் வலுக்கட்டும். பசித்தீ ஜ்வாலைவிட்டு எரியட்டும் .... பரவாயில்லை! அத்தகைய கொடிய வேலையை ஏற்றுக் கொள்வதைக் காட்டிலும் அவன் தற்கொலையாவது புரிந்துகொள்ளலாமே!

தன் குடும்பம் வாழ்வதற்காக பிறிதொரு குடும்பத்தையா அழிப்பது? அதுவும் புனிதம் நிரம்பிய அவனது கைகளால்! கொலை! களவு போன்ற தீச்செயல்களைப்பற்றி, அவன் இதுகாறும் அகத்தாலும் எண்ணியதில்லை ஆனால் இப்பொழுது அவன் செய்யப் போகிற காரியம்.........அப்பப்பா! ஒரு குடும்பத்தை அல்லவா அழிக்கப்போகிறது.

சுப்பனின் விழிகளில் நீர் குமிழ் குமிழாக அரும்பிநின்றன. எண்ணதெல்லாம் எண்ணித் துடித்தான். ஏழ்மை நிலைதானே அவனை இக்காரியம் செய்யத்தூண்டுகிறது. 'ஐயோ! ஆண்டவா! எனக்கு அருள்புரியமாட்டாயா? தடுமாறிப்போயிருக்கும் என் புத்தியை ஸ்திரப்படுத்தமாட்டாயா? என்று மனதிற்குள்ளாகவே இறைவனை வேண்டிக்கொண்டான். ஆனால் மறு நிமிஷமே அவனது மனோநிலை மாறியது. நேற்றிரவு அவன் மனைவி கூறிய வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. வேலைதான் கிடைக்க 'வில்லையென்றால் திருடியாவது பணம் கொண்டு வாயேன். நம் போன்ற ஏழைகளுக்கு திருடுவது பாவமா? அவன் மனம் சிறிது சிறிதாக மாறத்தொடங்கியது. மனோதிடம் தகர்த்தெறியப் பட்டது. நேற்று அவன் இல்லம் இருந்த நிலையைமனக் கண் முன்பு கொண்டு வந்தான்.

"அடுப்பு மூட்டப்படவில்லை. அதனருகே பூனை படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. பசியால் வாடிய அவனது மக்கள், அரைசாண் வயிற்றை மூடுவதற்கு துணி இன்றி, வெறும் தரையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். மனைவியோ சுவரில் சாய்ந்த படியே தன் விதியை எண்ணித் தவித்துக் கொண்டிருந்தாள்.

வறுமைப் பேய் தாண்டவமாடும் அவனது இல்லக்காட்சி அவன் மனத்தை நெகிழச் செய்தது.

"எஜமான்! நீங்கள் காலாலே இட்ட கட்டளையை தலையாலே சிரமேவேத்தறேனுங்க—" என்று உணர்ச்சியுடன் கூறினான்.

அண்ணாமலை செட்டியாரின் முகம் மலர்ந்தது—மடியைத் துளாவினார் வயிறு பெருத்த உப்பிப் போயிருந்த பர்ஸை வெளியே எடுத்தார். சுப்பனின் உள்ளங்கையில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் வந்து நின்றன.

பணத்தை வாங்கி நெற்றியில் ஒத்திக் கொண்டு "சாமி! வரேனுங்க என்றான்,

"சரி நம் காரியத்தை என்னிக்கு முடிக்கிறே? என்று வினவினார் செட்டியார்,

நாளைக்கு ராத்திரியே தீத்துடறேனுங்க" என்று சுப்பன் சொல்லிவிட்டு "விடு விடு" என்று வீட்டை நோக்கி நடந்தான்.

சமையல் புறத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த பூனை விரட்டப் பட்டது. அடுப்பு எறிந்தது, உருசிக்க உருசிக்க கறிக் குழம்பும் சாதமும் வெந்தது. சுப்பனும் மனைவி, மக்களும் வயிறார உண்டனர்,

அண்ணாமலையும், சக்ரபாணியும் ஒன்று சேர்ந்து கறுப்புச் சந்தை நடத்தி வந்தனர். ஒவ்வொரு மாதமும் ஏராளமான துணிமணிகள் விற்றன, கொள்ளை, லாபமும் கிடைத்து வந்தது. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் லாபத் தொகையை சரி சமமாக பங்கீடு செய்து கொள்வர். இவ்விதமே இருவரும் லட்சாதிபதியானார்கள்.

இவ்விதம் இருக்கையில், ஒரு சமயம் இருவருக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டுவிட்டது. சக்ரபாணி தான் லாபத்தில் அதிக பங்கு அடைந்து கொள்ள எண்ணி, கணக்கு வழக்குகளில் கள்ளத்தனம் பண்ண ஆரம்பித்தார் இதை எப்படியோ அறிந்து கொண்ட அண்ணாமலைக்குக் கோபம் தாங்க முடியவில்லை. சக்ரபாணியை கண்ட விதமாகத் திட்டினார் திட்டினதின் பயன் சக்ரபாணி வழக்கமாக கொடுக்கும் பங்கையும் "ஸ்வாஹா"

பண்ணிவிட்டா. எப்படி இருக்கும் அண்ணமலைக்கு?

தனக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை யாரிடமும் சொல்ல வழியின்றி தவித்தார். கோர்ட்டில் பிராது தொடுக்கலாமென்றாலோ அவருடைய கறுப்புச் சந்தைக் குட்டு வெளிப்பட்டு விடும். பாவம்! அவர் என்னதான் பண்ணுவார்? இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவித்தார்.

அச்சமயம்தான், அவரிடம் சுப்பன் அகப்பட்டுக் கொண்டான். தினசரி உணவிற்கு திக்கற்றிருந்த சுப்பனைப் பார்த்து சக்ரபாணி வீட்டில் ஒரு நாள் இரவு தீ வைத்துவிடு. அவ்விதம் பண்ணுவாயானால் உனக்கு ஐம்பது ரூபாய் தருகிறேன் என்றார்.

மறுநாள் இரவு பன்னிரண்டு மணி. தன்காரியத்தை முடிப்பதற்குப் புறப்பட்டான் சுப்பன்–அவனது மனதில் சொல்லோணாத பீதி குடி கொண்டிருப்பதை முகமே எடுத்துக் காட்டியது. உழத் தெரியாதவன் கையில் ஏர் இருப்பதுபோல் பாவம் என்பதின் பூர்ண அர்த்தமே புரியாத அந்த புனித மகன் கையில் தீப்பந்தம்! இருந்தாலும் பணம் அவனுக்கு ஊக்கமளித்தது. விரைந்து நடக்கலானான்.

விதி சுப்பனை எதிர்த்து நின்றது. எந்தக்காரியத்தை அவன் பணத்திற்காக பண்ணி முடித்தானோ, அந்தக் காரியமே அவனை சிறைக்கு வழி காட்டிச்சென்றது. எந்தக் காரியத்தைக் கொண்டு அவன் இன்பமாக வாழலாம் என்று நினைத்தானோ அந்தக் காரியமே அவன் வாழ்வைக் குலைத்தது.

சுப்பனுக்கு அபஜெயம்! சக்ரபாணி வீட்டில் தீ வைத்துவிட்டான். ஆனால் பிடிபட்டான். உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்லப்பட்டான். அங்கு சகல உண்மைகளையும் எடுத்துரைத்தான் சுப்பன்.

கோர்ட்டில் கேஸ் நடந்தது. அண்ணமலை சிறந்த வக்கீல்களைக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். ஆனால் ஏழை சுப்பனோ? அவனுக்கு யார் வக்கீல்? அவனேதான் அவனுக்கு வக்கீல்!

கோர்ட்டின் தீர்ப்புப்படி அண்ணமலை நிரபராதி என்று விடுவிக்கப்பட்டார். சுப்பனை குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு மூன்று வருஷக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. உளுத்துப்போன சமூகமே நீ சொல் யார் குற்றவாளி என்று?

ஐ. நா. வின், யோக்கியதை!

உலகப் பொதுச்சபை என்ற பெயரால் நியூயார்க் நகரில் நிரந்தரமாகக் குடி இருக்கிற ஐக்கியநாடுகள் சபைக்கு டில்லியில் கிளைக் காரியாலயம் ஒன்று இருக்கிறது. அதில் பல சிப்பந்திகள் வேலை செய்கின்றனர்.

இவர்கள் டில்லியில், அரசாங்க அநுமதியின்றி இரகசியமாகச்செய்தி யனுப்பும் (டிரான்ஸ் மிட்டர்) கருவி ஒன்றை 5-வருடங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் டில்லியின் அரசியல் ரகசியங்கள் அவ்வளவும் அமெரிக்காவுக்கு அவ்வப்போது போய்ச் சேர்ந்துகொண்டிருக்கின்றன.

இது இந்திய சர்க்காருக்கு இப்பொழுதுதான் தெரிந்திருக்கிறது. தெரிந்த பிறகு இந்திய அரசாங்க அநுமதிஇன்றி இரகசியச் செய்தியனுப்பும் கருவி வைத்திருக்கலாமா? என்று ஐ. நா. பிரதிநிதியைக் கேட்டதற்கு, அந்த நபர், **ஐ. நா. சபை உலக ஸ்தாபனம் ஆகவே அது எந்த நாட்டிலும் அந்நாட்டு அரசாங்க அநுமதியின்றி அக்கருவியை உபயோகிக்கலாம்** என்று தலைக் கனத்தோடு அலட்சியமாகக் கூறிவிட்டாராம்.

இதன் பிறகு இந்த அத்துமீறிய செயலை இந்திய வெளி நாட்டிலாகா ஐ. நா. பொதுக் காரியதரிசிக்கு அறிவித்திருக்கிறது.

[11–ம் பக்கம் பார்க்க]

வெண் சங்கு
டிரேட் மார்க்
சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பிற்கு
மேன்மையானது என்று
ஆற்றோரம் குளத்தோரம்,
கிணற்றோரம், குழாய்ஓரம்
எங்கும் இதே பேச்சுத் தான்.
எஸ். உரிமையாளர்:
பெத்தண்ண நாடார்
தஞ்சாவூர். போன் நிர். 108

மனதைக் குதூகலிக்கச் செய்யும் காபி — சிற்றுண்டிகளுக்கு
ஸ்ரீ சண்முகா கபே
பிருமணாள் காபி கிளப்
(புரோப்: ஆர். என். ஷண்முகம் பிள்ளை)
290, ராம்நாட் ரோடு. : : மதுரை.

வலதுசாரிகளிடமிருந்து

நேதாஜி கூறியது

காங்கிரசை மீட்கவே பார்வர்டு பிளாக்

1920ம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரசை காந்திஜியின் தலைமையின் கீழ் இடது சாரிகள் கைப்பற்றினர்கள். அப்போது தான் ஜின்னு, பி. சி. பால், பி, சக்கரவர்த்தி போன்ற தலைவர்கள் காங்கிரஸை விட்டு வெளியேறினர்கள். பின்பு காங்கிரசில் ஆதிக்க முள்ளவர்களாக இடது சாரிகள் இருந்தனர். கொஞ்சகாலம் காங்கிரசில் இடதுசாரிகளே பெரும் பான்மைக் கட்சியினராக இருந்தார்கள். 1922ம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்தை நிருத்தியபின் காங்கிரசில் பெரும் பான்மையாக உள்ள கட்சியிலேயே பிளவு எற்பட்டது. சுயராஜ்யலிஸ்டுகள் என்றும், மாற்றத்தை விரும்பாதவர்களென்றும் இரு பிரிவுகள் உண்டாயின.

பின்பு கொஞ்சகாலம் கழித்து சட்டசபைகருச் சென்றும் எதிர்ப்பு முன்னணி அமைப்ப தென்ற சுயராஜ்யலிஸ்டுகளின் திட்டம் எற்கப்பட்டு கருத்து வேறுபாடு இருபிரிவினரிடையே நீங்கியது. 1928ம் ஆண்டில் நேரு கமிட்டியின் ரிப்போர்ட் வெளியானது. டொமினியன் அந்தஸ்து அடிப்படையில் இந்தியாவிற்கு அரசியல் சட்டம் வேண்டுமென்று இக்கமிட்டியின் பெரும்பான்மையான உறப்பினர் கருத்துத் தெரிவித்திருந்தனர் அப்போது இக்கருத்தை எற்காதவர்கள் கூடி சுதந்திர லீக்கை எற்படுத்தினர்கள்.

1928ம் ஆண்டு கல்கத்தாவில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் கூடியது- பூர்ண சுதந்தரமே தன்னுடைய குறிக்கோள் என்ற கொள்கையைக் காங்கிரஸ் அறிவிக்க வேண்டுமென்று சுதந்திர லீகினர் முயன்றனர். ஆனல் பயனேதும் எற்படவில்லை. இதற்கு காந்திஜியின் தலைமையில் இயங்கியவர்களே முக்கியமாக எதிர்ப்பினராக இருந்தனர். 1929ம் ஆண்டு லாகூரில் காங்கிரஸ் மகாசபைக்கூட்டம் நடக்கும் வரை சுதந்திர லீகினருக்கும் மற்றவர்களுக்கு மிடையே போராட்டம் நடந்து கொண்டே இருந்தது. பின்பு லாகூர் மகாசபைக் கூட்டத்தில் சுதந்திரமே காங்கிரசின் லட்சியமென்று காந்திஜீ கூறியதன் பேரில் அறிவிக்கப்பட்டது.

இதன்மூலமாக காங்கிரசின் இரு சாரார்களுக்கு மிடையே உடன்பாடு எற்பட்டு பின்பு 1930ம் ஆண்டில் தொடங்கப்பட்ட சட்டமறுப்பு இயக்கத்தில் இருபிரிவினரும் தோளோடு தோள் நின்று போராடினர்கள்.

1933ம் ஆண்டு இவ்வியக்கம் நிறுத்தப்பட்டது. அத்துடன் பார்லிமெண்டரி திட்டத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி எற்றது. இத்திட்டத்தை காங்கிரசில் உள்ள எதிர்கட்சியினர் எதிர்த்தனர். அப்போது தான் காங்கிரஸ் சோஷலிலிஸ்ட்கட்சி உதய மானது. இக் கட்சியின் சரியான காலத்தோற்றத்தின் மூலமாக வலது சாரிகளின் பிற்போக்குக் கொள்கை அதிகமாக வளர்ச்சியடையாமல் தடுக்கப்பட்டது. காங்கிரஸில் உள்ள இடது சாரிகளின் உறைவிடமாக காங்கிரஸ் சோஷலிஸ்ட்கட்சி அமைந்து விட்டது.

1934ம் ஆண்டு முதல் 1937ம் ஆண்டு வரை எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் காங்கிரஸ் சோஷலிஸ்ட்கட்சி வளர்பிறைபோல வளர்ந்தது. ஆனல் ஹரிபுராவில் காங்கிரஸ் மகாசபை கூட்டம் கூடியது. அப்போது இனிமேல் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி முன்னேறுதென்பது தெளிவாகியது. அன்று காங்கிரஸிற்குள்ளேயே எகாதிபத்தியத்தின் எதிர்ப்பு சக்தியாக சோஷலிஸ்ட் கட்சி இயங்கவேண்டுமென்றும் அப்போது தான் சோஷலிஸ்ட் கட்சி வளர முடியுமென்றும் இம் மகாசபை கூட்டத்தில் என் தலையுரையில் கூறினேன்.

ஹரிபுரா மகாசபைக்கூட்டத்துக்குப்பின் இக்கருத்துப்பற்றி சோஷலிஸ்ட்களுடனும், கம்யூனிஸ்டுகளுடனும் விவாதிக்கப்பட்டது. இவர்கள் இக்கருத்தை எற்றனர். சோஷலிஸ்ட்டுகள் அல்லது கம்யூனிஸ்ட்களுடன் சேரவிரும்பாத காங்கிரஸில் உள்ள எல்லா முற்போக்கான சீவிர, எகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை குறைந்த அளவுத்திட்ட அடிப்படையில் ஒன்று சேரவேண்டுமென்று கருதப்பட்டது. இப்படி ஒன்று திரட்டுவதன் மூலமாகவே வலது சாரிகளின் எதிர்ப்பை சமாளித்து மார்க்கிசகட்சி தயாராகமுடியுமென்று நானும் கருதினேன். 1938ம் ஆண்டு காந்திஜியின் தலைமையில் இயங்கியவர்கள காந்தி சேவா சங்கம் என்ற பெயரால் இயங்கினர்கள். அப்போது தொழிலாளர் பகுதியில் வகுப்புஉணர்ச்சியைஊட்டி ஐக்கியமாக பணியாற்றிய தொழிற் சங்கவாதிகளை விரட்டிவிட்டு தொழிலாளர் பகுதியைக் கைப்பற்ற தன் எஜண்டுகளை அனுப்ப இச் சங்கம் முடிவுசெய்தது. அத்துடன் நாட்டிலுள்ள மாகாண, மற்றுமுள்ள காங்கிரஸ் கமிட்டிகள் நிருவாகத்தைக்கைப் பற்றவும் தனது முக்கியமான உறுப்பினர்களை அனுப்பவும் இச் சங்கம் முடிவு செய்தது.

1934ம் ஆண்டு அ. இ. காங்கிரஸ் கமிட்டி தயாரித்த பார்லிமெண்டரி திட்டம் 1937ம் ஆண்டு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி நிருவாகப் பொறுப்பை எற்பதில்வந்து முடிந்தது. இதன் மூலமாக தன் நிலைமையைப் பலப்படுத்தவும், செல்வாக்கை வளர்க்கவும் இடது சாரிகளை எதிர்த்து நடவடிக்கை எடுக்கவும் வலது சாரிகளுக்கு வசதி எற்பட்டது. இந்த எதிர்ப்பை சமாளித்து வாழ வேண்டுமாஞல் இடதுசாரிகள் கட்டுப்பாடாக இருக்கவேண்டியதாயிற்று. [12-பார்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கள்—கயானைவைத் தாயகமாகக் கொண்டு!

பிரிட்டனில் இந்தியர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கூட இருந்தார்கள்—இருக்கிறார்கள்— பிரிட்டனின் பிரஜைகள் என்ற அந்தஸ்தோடு!

அமெரிக்காவில் இந்தியர்கள் வாக்குரிமை பெற்று, அமெரிக்கக் குடிகளாகவே அநேகர் வாழுகின்றனர்.

ஜப்பானில் எத்தனையோ இந்தியர் ஜப்பான் குடிகளாக மாறி உரிமையோடு வாழுகிறார்கள்.

மலேயாவில் இந்தியர்கள் மந்திரி பதவி வகிக்கும் அளவுக்கு உரிமை பெற்றிருக்கிறார்கள்.

பர்மா அரசாங்கம் சோஷலிசம் செய்தாலும், இந்தியர்களை விரட்டியடிக்கவில்லை.

ஆனால் உலகப்படத்தில் பைசா அகல இடம் கூடப்பெறாத — இந்தியாவின் காலடியில் ஒரு துளியாகத் தொங்கும் இலங்கையின் பிரதமர் குமுறுகிறார்—கொந்தளிக்கிறார் இந்தியரை வெளியேற்ற! நன்றியைக் கொன்ற செயல் இது!

இலங்கை இந்தியர்கள் இந்தியாவிற்குப் பணம் அனுப்புவதில் தான் குறியாயிருக்கிறார்கள்— இலங்கையைச் சுரண்டி சொட்டையாக்குவதே அவர்கள் லட்சியம்—என்றெல்லாம் கொட்டியிருக்கிறார் கொத்தலவாலா.

இதில் ஒரு சிலரைவைத்து அவசர முடிவுக்கு வந்துவிட்டார் அவர்.

இந்தியருக்குப் பணம் அனுப்பும் அளவுக்கு இலங்கையில் பெருவாரியான வருவாய் வசதிபெற்ற இந்தியர் எத்தனை பேர் இருக்க முடியும்?

ஒரு சிலர் அப்படியும் இருக்கலாம், ஆனால் கொத்தலவாலா விரட்டியடிக்க முயல்கிற இந்தியர்கள் அத்தனைபேரும், ஏழைத் தொழிலாளிகளும், பஞ்சைப் பந்திகளும்தான்! இவர்கள்தான் இலங்கையில் அதிகம்! இவர்கள் தான், கொத்தலவாலா பிரதமராக இயங்கும் அளவுக்கு இலங்கையைத் தயாரித்தவர்கள்! இவர்கள் இந்தியர்களாக இருந்தாலும் இலங்கையைத் தாய்நாடாகக் கொண்டவர்கள்! இவர்கள் இந்தியாவுக்குப் பணம் அனுப்பத் தேவையுமில்லை. அப்படி அனுப்புவதாக இருந்தாலும், நெருங்கிய உறவினர்களின் கைச் செலவிற்காக மாதம் 20–30 ரூபாய் தான் அனுப்புவார்கள். அதற்குமேல் அனுப்ப, இலங்கையில் அவர்களிடம் பணம், பைசாவாகப் புரளவில்லை. அந்த அளவுக்கு அவர்களைச் செழிப்பாக வாழ்விக்கவுமில்லை, கொத்தலவாலா!

தமது நியாயயீனத்தைச் சரிப்படுத்துவதற்கு, வாயில் வந்ததை எல்லாம் சட்டமாக்கினால், அச்சட்டமே தன்னைத் திருப்பிப்பாயும் கட்டத்தை கொத்தலவாலா எதிர்நோக்கியாக வேண்டும்!

நேரு சர்க்காரின் அசட்டை, கொத்தலவாலாவை முரட்டுத் தனத்தில் அதிகம் ஊறவைத்துவிட்டது. ஆனால் முரட்டுத்தனத்தின் மூலம் நீண்டநாள் ஆண்டுவிடமுடியாது என்பதை இலங்கைப் பிரதமர் உணரவேண்டும்.

இலங்கை இந்தியர் தன் நிலையுணர்ந்து ஒன்றுபட்டு, ஒரு முனைக்கு வந்துவிட்டால், இலங்கையில் இந்தியர்களுக்காக ஒரு பாகிஸ்தான் உண்டாவதைகொத்தலவாலாவின் முரட்டுச்சட்டம் தடுத்துவிட முடியாது!

அப்படி ஒரு நிலைமை கால்கோலு முன், கொத்தலவாலா இலங்கை இந்தியரை அரவணைத்து தனது நாட்டின் ஜனசக்தியைக் கூட்டிக் கொள்வது இலங்கைக்கு நல்லது.

இலங்கை இந்தியர், இலங்கைக் குடிகளாகி விட்டால், இலங்கையின் வளமும், வாய்மையும் நிரந்தரமாக நின்றோங்கும் என்பதையும் கொத்தலவாலாவுக்கு அறிவுறுத்துகிறோம்!

மலேயாவில்
நமது விற்பனையாளர்
பினாங்கில்
பி. சிவகுரு
த. பெ. நிர். 518
தைப்பிங்கில்
ரெக்ஸ் புக் ஸ்டால்.

குளிக்க, சமைக்க, உச்சியில் நித்தியம் வைத்துக்கொள்ள, அசல் தரமானது,

அனுமார்கோவில் நல்லெண்ணெய்

தந்தி: எள்ளு மதுரை. போன் நிர். 429

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜம்மு—காஷ்மீர் விவகாரத்திற்குப் பஞ்சாயத்துப்பண்ண வந்த ஐ. நா. கமிஷனுக்காக இந்தக்கருவி 1949ல் டில்லியில் நிர்மாணிக்கப்பட்டது.

பிறகு ஐ.நா கமிஷனிலிருந்து அமெரிக்கப் பிரதிநிதிகள் விலக்கப்பட்டு விட்டனர்.

அதன் பிறகு இக்கருவி எவருக்கும் தெரியாமலே அமெரிக்கரின் சொந்த விஷயங்களுக்குமட்டுமின்றி கொரியாவில் அமெரிக்கர் ஐ. நா.வின் பெயரால் நடத்திய ஆக்ரமிப்புப் போர்சம்பந்தமான சகல இரகசியத் திட்டங்களும் இந்த டில்லியில் உள்ள கருவி வழியாகத்தான் அமெரிக்காவுக்குப் போய் வந்தன.

இதே மாதிரி கருவி ஒன்றை பிரிட்டன் ஸ்தானிகரும் டில்லி, பம்பாய் கல்கத்தா, சென்னை முதலிய நகரங்களில் லைசன்ஸ் இன்றியே இயக்கி வந்தாராம். இந்திய அரசாங்கம் தலையிட்டதன் பிறகுதான் தவறை உணர்ந்து லைசன்ஸ் வாங்கப்பட்டதாம்.

ஆனால் ஐ. நா. சபைமட்டும் இன்னும் லைசன்ஸ் வாங்கவில்லை. இந்தியாவின் புகாருக்கு ஐ. நா பொதுக் காரியதரிசி இன்னும் பதிலேஅளிக்கவில்லை.

உலகில் நியாயத்தை நிர்த்தாரணம் செய்ய முளைத்துள்ள ஐ. நா. சபையின் யோக்கியதை எப்படி இருக்கிறது? வேறு நாடாக இருந்தால் இந்தக் குற்றம் ஐ. நா வையே தலைகீழாக்கி இருக்கும். இந்தியா தானே! எவரும் அதன் தலையில் எண்ணெயும் தேய்க்கலாம்—தேனையும் தேய்க்கலாம்' நேருதான் சமாதான வாதியாயிற்றே, சண்டைக்குப் போகமாட்டாரல்லவா!

ஜப்பானுக்கும், மக்கள் சீனவுக்கும் அரசியல் உறவை ஏற்படுத்துவது குறித்துப்பேச பிரதிநிதிகளை அனுப்பி வைக்கும்படி சூ—என்—லாய் நம்மைக் கேட்டிருக்கிறார். ஆசியாவின் அருமையான எதிர்காலத்திற்கு இது நல்லதொரு சமிக்ஞை!

ஜப்பான் பிரதமரின் கண்ணீர்.

ஜப்பான் பிரதமர் ஹட்டோயாமா, ரஷ்ய—ஜப்பான் அனுக்ரமிப்பு ஒப்பந்தத்தின் அவசியம்பற்றி ஜூலை 26-ல் ஜப்பான் மேல் சபையில் விவரித்தார்—அப்பொழுது அவர் கண்களில் நீர் கசிந்து விட்டது. ஏனெனில், எதிர்கால ஜப்பான் வலிமையோடிருக்க வேண்டும் என்பதற்காக 2-வது போரின் முடிவில் ரஷ்யா ஜப்பானுக்கு மறைமுகமாக எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கிறது. நாளைய ஜப்பான் அமெரிக்காவை ஓட ஓட விரட்டுவதற்கு அனுகுணமாக போரின் முடிவில் ஜப்பான் ராணுவ மேதைகளையும், விஞ்ஞான நிபுணர்களையும் அடைக்கலம் கொண்டிருக்கிறது. அமெரிக்காவிடம் அடிபணிந்திருப்பது இன்றைய ஜப்பான் தான்—நாளைய ஜப்பான் அல்ல! ஜப்பானிடம் அடிபடும் அமெரிக்காவை அதிவிரைவில் உலகம் காணப்போகிறது. நாளைய ஜப்பானின் சிறப்பை இன்று நினைத்துப் பார்க்கிற ஹட்டோயாமா, அதற்கு அன்று வாய்ப்பளித்த ரஷ்யாவை நினைத்ததும் உணர்ச்சிமுதிர்ந்து கண்ணீர் கசிந்து விட்டது.

அந்த அடக்கமான ஆவேசத்தோடு ஹட்டோயாமா கூறியவை:—

ஜப்பானுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே சமாதானப்பேச்சு முடிந்து, அனுக்ரமிப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகிறவரை நான் பிரதமர் பதவியில் இருக்கப்போகிறேன்.

(1-ம் பத்தி பார்க்க)

ஆசியாவின் பெரும் பகுதி மக்களின் அறிமுகத்தைப் பெற்ற நவீன இயந்திரத் தயாரிப்புகள்

நேயர்களுக்கு

சுடச்சுட பகுதி மக்களுக்காகத்தான் ஆயினும் பலர் இப்பகுதியைச் சரிவரப் பயன் படுத்தத் தவறி விடுகின்றனர். பயனற்ற கேள்விகளைக் கேட்டு இந்தப்பகுதியின் லட்சியத்தைக் கெடுக்கின்றனர். பதில் வராவிடில் கோபமாயும் எழுத ஆரம்பித்து விடுகின்றனர் சிலர்.

ஆசிரியரின் அறிவுக்குச் சாணை கொடுப்பதாகவும் அதே சமயம் தமக்குள்ள சந்தேகங்களைக் களைந்து கொள்வதாகவும் இருக்க வேண்டும் கேள்விகள்.

வாசகர்களுக்குத் தேவையான எல்லாமுமே ஒரு பத்திரிகையில் வெளியாகிவிட முடியாது. மேலும் ஒரு பத்திரிகைக்குப் பல ஆயிரம் வாசகர்கள் இருப்பார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் ஆளுக்கொரு விஷயத்தில் ருசி இருக்கும். அந்தருசிகளைத் தனித்தனியே அறிந்து அதை பத்திரிகையில் வெளியிட்டு அந்த வாசகரின் அபிலாஷையைத் தீர்த்து விடுவதென்பது அசாத்தியம். இது தவிர, வாசகர்களுக்குத் தெரிய வேண்டிய விஷயங்கள் பலஉண்டு. அவை அத்தனையும் ஒரு பத்திரிகாசிரியரின் கவனத்தில் தைத்துவிடாது, தைப்பதாகவிருந்தாலும், அந்தப்பல விஷயங்களையும் கட்டுரைகளின்மூலம் எழுதினால் பக்கம் அடைபட்டுவிடும் அதற்காக, வாசக நேயர்கள் குறிப்பிட்ட பலவிஷயங்களை அவ்வப்போது கேள்விகளாகக் கேட்டு வைத்தால், அந்த விஷயத்தைச் சிலவரிகளில் பதில்கள் மூலம் விளக்கலாம். அதனால் விஷய விளக்கம் கிடைப்பதோடு பத்திரிகையில் இடத்தையும் மீதப்படுத்தலாம்.

எல்லோரும் பயன்படத்தக்க கேள்விகளாக இருந்தால், அக்கேள்விக்குரிய பதில் ஆசிரியருக்குத் தெரியாவிட்டாலும், பதில் சொல்லித்தீர வேண்டிய கட்டமைக்காக கேள்விக்குரிய விளக்கத்தை எப்படியும் ஆராய்ந்து பார்ப்பார். அதன் மூலம் ஆசிரியருக்கும் அவ்விஷயம் தெரியும் வாசகர்கள் தெரியவும் ஏதுவாக இருக்கும்.

இதற்காகத்தான் பத்திரிகைகளில் கேள்வி—பதில்பகுதி ஒதுக்கப்படுவது.

உதாரணமாக; ஒரு நண்பர் கண்ணகிக்கு; 'உலகில் பெண்களே இல்லாத நாடு எங்கேனும் இருக்கிறதா? என்று ஒருகேள்வி கேட்டிருந்தார். அதற்குப் பதிலளிக்க பல புத்தகங்களைப் புரட்ட வேண்டியதாகிவிட்டது. பெண்களே இல்லாத ஒருதீவு கிரீசுக்குப் பக்கத்தில் இருப்பதை எப்படியோ கண்டுபிடித்து பதில் சொல்லித் தீர்ந்து விட்டது, இதுஅருமையான கேள்வி. இதன் மூலம் பெண்களே இல்லாத ஒருதீவு உலகில் இருக்கிறது என்பதை ஆசிரியரும் தெரிந்து கொண்டார். வாசக நேயர்களும் தெரிந்து கொண்டார்கள்.

கேள்விகளின் தரம் இப்படி இருக்க வேண்டும். இதன்றி, அடுத்த வீட்டுக்காரி கண்ணடிக்கிருள்- நான் என்ன செய்யவேண்டும்? என் மனைவிக்கு என்னைப் பிடிக்கவில்லை—என்னசெய்யலாம்? குன்றக்குடி அடிகளாருக்கு காதல் இதயம் இல்லையா? என்பன போன்ற கேள்விகளைச் சிலர் கேட்கின்றனர்—பதில் சொல்லாவிடில் மற்றொரு முக்காலணா கார்டில் தாக்கி எழுதிவிடுகின்றனர், இவர்களைப் பற்றி என்ன சொல்வதென்றே விளங்கவில்லை இத்தகைய அன்பர்கள் தயவுசெய்து தமதுமூளையைச்சலவை செய்து கொள்ளவேண்டும். இம்மாதிரிக்கேள்விகளுக்கு கண்ணகி பதில் தராது. வீண் கேள்விகளுக்கு விளக்கம் கொடுப்பதற்காக அல்ல இந்தப் பகுதி என்பதை அறிவுறுத்துகிறேம்.

கண்ணகிக்கு எத்தனையோகேள்விகள் வருகின்றன. அவைகளில் ஒரு சில கேள்விகள் தான் பதிலுக்கு லாயக்காக இருக்கின்றன.

இனி ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் மிகச்சிறந்த கேள்விக்குரிய நபருக்கு கண்ணகி 3—மாதங்கள்வரை இலவசமாக அனுப்பப்படும்,

உருப்படியான கேள்விகளாகக் கேளுங்கள். வரவேற்கிறேம்!

[9—ம் பக்கத் தொடர்ச்சி]

போது காங்கிரசின் சோஷலிஸ்ட் கட்சியில் எல்லாமுற்போக்கு, தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் ஒன்று சேர்ந்தால் பிரச்னை எளிதாகியிருக்கும்! ஆனல் அது தான் ஏற்படவில்லை. இதனல் தான் ஹரிபுரா காங்கிரஸுக்குப்பின் பொதுவான குறைந்த அளவுத் திட்டத்தில்இடது சாரிகளைக்கொண்டு இடது சாரிகள் கோஷ்டியை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. இப்படி அமைக்கப்பட்ட இடது சாரிகள் குழுதான் பார்வார்டு பிளாக் என்று அழைக்கப்படுகிறது. தனிப்பட்டவரோ அல்லது கோஷ்டிகளோ ஏமாற்றலாம். ஆனல் நமது லட்சியம் பாதிக்கப்படவோ புறக்கணிக்கப்படவோ கூடாதென்று கருதிய இடது சாரிகள் கூடியே பார்வார்டுபிளாக் கட்சியை உருவாக்கினர்கள். வலது சாரிகளின் பிடிப்பிலிருந்து காங்கிரசைக் காப்பாற்ற வேண்டும். வலது சாரிகள் புரட்சி மனப்பான்மையை விட்டு விட்டனர். இடது சாரிகளால் தான் புரட்சி எண்ணத்துக்குப் புத்துயிர் அளித்துக் காப்பாற்ற முடியும்.

இன்று ''சோஷலிசம்'' என்ற சொல் மலிவாகிவிட்டது. சில மாகாணங்களில் மந்திரிகளுக்குப் பக்கபலமாக உள்ளவர்கள் கூட தங்களை சோஷலிஸ்டுகளென்று கூறிக்கொள்கிருர்கள். ஆகையால் சோஷலிஸ்ட் போர்வையில் உள்ள வலது சாரிகளைக் கண்டு நாம் சர்வஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இன்று நமக்கு தேவையானது வெறும் வாய்ப் பேச்சல்ல; செயல்முறைதான். சோஷலிஸ்டுகளாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி காங்கிரஸில் உள்ள எல்லா முற்போக்கு தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடனும் பார்வார்டு பிளாக் ஒன்று பட்டு ஒத்துழைக்கும்! சுதந்திரமடைந்தவுடன் பார்வார்டு பிளாக் கைக்கலைப்பதென்று அர்த்தமல்ல. ஆனல் இக்கட்சியினுடைய வாழ்கையிலும் நடவடிக்கையிலும் புதுக்கட்டம் ஆரம்பமென்றே அர்த்தமாகும்.

அனுயாச நடிகர் வி. கே. ராமசாமி பேட்டி

படத்தில் வி. கே. ராமசாமி எப்படி அவ்வளவு அனுயாசமாகப் பேசி நடிகக முடிகிறது என்பதை நேரில் அவரைப் பார்த்ததும் தான் தெரிந்து கொண்டேன் ஏனெனில் நேரிலும் அப்படித்தான் பேசுகிறார்!

கீழே பட்டனை அழுத்தினல் மாடியில் காலிங்பெல் சிணுங்கும். அதாகப்பட்டது நடிகர் எட்டிப்பார்ப்பார். ராயப்பேட்டையிக் ஒருமாடியில் இவர் இருந்து வருகிறார்: "படத்தில் நடிச்சதிலே நாலணகூட மிச்சமில்லிங்க" என்று கூறிவிட்டு ஐந்தணவுக்கு இரண்டு கலர்கள் வாங்கிக்கொடுத்தார்!!

பேட்டி ஆரம்பமாகியது!

கே:- நீங்கள் முதலில் நடித்த படம் எது?

ப:- நாம் இருவர்.

கே:- நடிக்கும் படங்கள் எவை?

ப:- செந்தாமரை, ராகினியின் இசை வாணன், எம்.ஆர்.எஸ்ஸின் சந்திப்பு, நளினியின் படித்த பெண், சியாமளாவின் பாட்டாளி, பாரகனின் நான் பெற்ற செல்வம், எம். ஏ. வி டவுன் பஸ், கே. கே. ஆர். குங்குமம், ஸ்ரீ சுகுமார் தெருப் பாடகன்.

கே:- எம்மாதிரிப் பாகங்களில் நடிக்கப் பிரியம்?

ப:- எல்லாப் பாகங்களிலும் நடித்துவிட்டேன். ஆகையால் எல்லாமே பிரியம் தான்.

கே:- எம்மாதிரி வசனம் பிடிக்கும்?

ப:- சாளமாகப் பேசுவது தானே எனக்குப் புகழ்தந்தது. அம்மாதிரி தான் பிடிக்கும்.

கே:- மறக்க முடியாத சம்பவம் ஏதாவது கூற முடியுமா?

ப:- சென்றமே முதல்தேதி நான் பெற்ற செல்வம் படப்பிடிப்பிற்காக சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு பெங்களூர் வழியாக நானும் ஏ.பி நாகராஜனும் ஏரோப்பிளேனில் சென்றோம். அப்பப்பா! அதை எப்பொழுதும் என்னல் மறக்கமுடியாது! ஏ. பி. நாகராஜன் இறங்கி ரெயிலில் போய்விடலாமா என்கிற அளவுக்கு வந்துவிட்டார், நான்உள்ளே பயந்து கொண்டு அவருக்கும் தைரியம் சொன்னேன்; மேலும் டி. ஆர் மகாலிங்கத்தால் நான் நடிகனானதையும் மறக்கமுடியாது. தவிர முன்பு ஏ. பி நகராஜனுக்கு நான் நல்லஉதவி செய்திருக்கிறேன். அதை அவர் மறக்காமல் எனக்கு இப்போது உதவி செய்கிறார்.

கே:- அரசியல் கட்சிகளில் உங்களுக்குப் பற்று எதன் மீது?

ப:- கம்யூனிசத்தின் மீது எனக்கு பற்றுதல் உண்டு.

கே:- பொழுதுபோக்கு என்ன?

ப:- புத்தகம் படித்தலும், சினிமா பார்த்தலும்,

கே:- ஆங்கிலம், ஹிந்திப் படங்கள் பார்ப்பதுண்டா?

ப:- நிறையப் பார்ப்பேன்.

கே:- அவர்களில் யாரைப்போலாவது நடிக்க விரும்புகிறீர்களா?

ப:- இல்லை.

கே:- நாடக அனுபவம் உண்டா?

ப:- 14 வருட அனுபவம் உண்டு. டி. பி. பொன்னுச்சாமி மதுரபால கான சபா, எனெஸ்கே நாடகசபா, என் சொந்தக்கம்பெனி இவைகளில் அனுபவம் உண்டு.

கே:- சிவாஜி கணேசன், சின்னப்பா இவர்கள் நடிப்பைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப:- இருவரும் நல்ல நடிகர்கள் தான், கணேசனல் பாட முடியாத குறைதான்.

கே:- சினிமாத் தொழிலி லிருப்பவர்கள் அரசியலில் ஈடுபடலாமா?

ப:- டெக்னீஷியன்கள் ஈடுபட்டால் பரவாயில்லை. நடிகர்கள் அரசியலில் ஈடுபடுவது அதை திரையில் பயன்படுத்துவது சரியல்ல.

கே:- எதுவரை படித்திருக்கிறீர்கள்.

ப:- மூன்றும் பாரம்- கால் பரீட்சைவரை!

கே:- என்னென்ன மொழிகள் தெரியும்?

ப:- தமிழ் மட்டும். ஆனல் ஆங்கிலமும், தெலுங்கும் பேசினல் புரியும்.

கே:- கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்?

ப:- மொத்தம் ஐந்துபேர். மூத்த அண்ணன் ஒருவர். அடுத்தது நான், அடுத்து ஒருதம்பி, பிறகு இருதங்கைமார்.

கே:- திருமணமாகிவிட்டதா?

ப:- ஆகிவிட்டது. ஒரு பெண் குழந்தையும் இருக்கிறது.

கே:- பிறந்த ஊர் எது?

ப:- விருதுநகர்.

கே:- வயது என்ன?

ப:- இருபத்தொன்பது.

கே:- யாருடைய நடனம் பிடிக்கும்?

ப:- கமலா நடனம்.

கே:- உங்களுக்குப் பிடித்தது எது? பிடிக்காதது எது?

ப:- நல்லது பிடிக்கும். கெட்டது பிடிக்காது.

கே:- நீங்கள் எப்படி திரையில் சேர்ந்தீர்கள்?

ப:- நான் சினிமாவில் சேர எந்த முயற்சியும் செய்யவில்லை. நாம் இருவர் நாடகத்தை ஏ. வி. எம். பார்த்தார். அதைப் படமாக்கி என்னையும் நடிக்க வைத்துவிட்டார்.

கே:- எத்தனை படங்களில் நடித்திருக்கிறீர்கள்?

ப:- கிட்டத்தட்ட நாற்பது படங்களில் நடித்திருக்கிறேன். நாலணு மிச்சமில்லை!

கே:- அண்ணு, கருணநிதி, நாகராஜன் வசனங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

1ாப:— திரைக்கு அண்ணாவின் பணியைவிட கருணாநிதியின் பாணி பூரணமாக அமைந்து விடுகிறது ஏ.பி நாகராஜன் நாடக அனுபவத்தின் மூலம் எழுதுகிறார்.

"டிடெக்டிவ்"

அவரை இனி அப்பாவேடத்தில் நடிக்கவைப்பார்கள்

திரைப்படங்களில் பெண்கள் பாகத்திற்கு பெண்களையே நடிக்க வைத்து விடுகிறார்கள். அப்படியில்லாமல் ஆண் நடிப்புக்கு பெண் வேடம் போட்டுவிடுவதாக இருந்

பார்க்கலாம். ஆனால் ரசிக்க முடியவில்லையே!

ஆசை அண்ணா அருமை தம்பி

படத்தின் பெயர் நீளமாக இருக்கிறதே தவிர ரசனை குட்டையாக முடிந்து விடுகிறது.

கதை வசனம் சக்தி கிருஷ்ணசாமி, கதையில் ஒன்றும் புதுமையில்லை. வசனத்தின் முற்பகுதியில் நல்ல நகைச்சுவை தெளிக்கப்பட்டிருக்கிறது. அவை டி, ஆர். ராமச்சந்திரனின் வாயிலிருந்து வெளிவரும்போது தேன்துளிருசியாக இருக்கிறது.

டி. ஆர். ராமச்சந்திரன் படத்தின் இருதயமாக ஒரே துண்டு, ஒரே வேஷ்டியோடு கடைசிவரை வந்து ரத்த ஓட்டத்தை சரிப்படுத்துகிறார். முற்பகுதியில் நகைச்சுவையாகவும் பிற்பகுதியில் கண்ணீர் கொட்டும் பாகத்திலும் நடிக்கிறார். இரண்டையுமே நன்கு ஏற்று நடிக்கிறார்.

எ, பி. நாகராஜனை இந்தப்படத்தில் பார்த்தவர்கள் தைரியமாக தால் இவரது நடைக்காகவே சான்ஸ் பிய்த்துக்கொண்டு நிற்கும்.

மாதுரிதேவி முற்பகுதியில் ஓட்டமும் நடையும் கொண்ட துறுதுறுத்த பெண்ணாக நன்கு நடிக்கிறார் பாவம் கதாசிரியர் பாதியிலேலே அவரைச்சாகடித்து விடுகிறார், சில இடங்களில் இவர் காதல் விஷமம் செய்வது, புளிக்குடித்தமாதிரி இருக்கிறது.

ராஜசுலோசனா நடிக்கவில்லை-நடமாடுகிறார். நடமாடவும் வேண்டாம். ஒரே இடத்தில் உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருந்தாலே போதாதா?

ஒளி, ஒலி, பரவாயில்லை. டைரக்ஷனில் குறிப்பிடத்தக்கவாறு ஒன்றுமில்லை. 15- வருடங்களுக்குப் பிறகு எல்லோருக்கும் வயதாகும்போது ராஜசுலோசனா மட்டும் 16 வயது மார்க்கண்டியாக இருப்பது டைரக்டர் ஜி. ஆர். ராவ் கோளாறுதான்

கண்ணகி வார வெளியீடு.

ஏற்கனவே அறிவித்தவாறு நமது கண்ணகி வாரவெளியீட்டிற்கான ஏற்பாடுகள் முடிவடைந்து விட்டன, ஆவணீ 1 முதல் வாரமாக்கி விட நிச்சயித்தோம். ஆனால் அகில பர்மா தமிழர் சங்க அழைப்பின் மீது பசும்பொன் திரு உ. முத்துராமலிங்கத் தேவரவர்களும் திரு மூக்கையாத் தேவர் அவர்களும், நானும் பார்மாவுக்குச் சென்றுவ்ர வேண்டியதிருப்பதால் தள்ளிப்போட வேண்டியதாகிவிட்டது.

கிட்டத்தட்ட மூன்று வாரங்களில் பர்மா சுற்று பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியவுடன் நமது கண்ணகி வார வெளியீடாகி விடும் எனபதை நேயர்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன். ஜெய்ஹிந்த்!

சக்திமேகன்

ஆசிரியர்.

கொஞ்சம் கவனியுங்கள்!

ஆளுக்கொரு **சோடா**

குழந்தைக்கொரு "ஆரென்ஸ்"

கிரைப்-டில்-வாட்டர்

[இரண்டும் வீட்டுக்கு வீடு இன்றியமையாதவை]

தயாரிப்பு:— பாரத் டிரக் ஹௌஸ், மதுரை.

உரிமை:- டி. என். சி. நாகலிங்கம் பிள்ளை, அண்ட் சன்ஸ்.

குலேபகாவலி

காசுகுவிக்கும் படம் ஆனால் கலையை மூளியாக்குறகிது

தோல்வி முகட்டைத்தவிர வேறொன்றையுமே கண்டறியாத ஆர். ஆர். பிக்சர்ஸார் குலேபகாவலி மூலம், வசூலைப் பொறுத்தவரை வெற்றி ஏணியின் படிகளில் ஏறஆரம்பித்திருக்கின்றனர்.

பழைய கதையிலுள்ள மாயா ஜாலங்களெல்லாம் எடுத்தெறியப்பட்டு கதை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. வசனம்தஞ்சை ராமையாதாஸ் எழுதியிருக்கிறார். வசனத்தைக் கேட்கும்போது'' அவர் எழுதிய வசனங்களா இவை?'' என்கிற சந்தேகம் எழும்பக்கூடிய படி அவ்வளவு நன்றாகஎழுதியிருக்கிறார். பகுத்தறிவு மன்றத்தில் தாசன்முல்க் நிறுத்தி வைக்கப்பட்டு கேட்கப்படும் கேள்விகளும் பதிலும் மிகவும் பாராட்டத்தக்கவகையில் அமைந்திருக்கின்றன.

பாடல்களையும் அவரே எழுதியிருக்கிறார். கடைசி பாடல் விந்தன். எல்லாப் பாடல்களுமே கேட்க நன்றாக இருக்கின்றன. குறிப்பாக லீலா பாடும்'' வில்லேந்தும் வீரரெல்லாம் — ''லா...ல...லா'' என்ற ஜிக்கியின் பாடலும் மிகமிக நன்றாக இருக்கிறது.

எம். ஜி, ராமச்சந்திரன் நடிப்பு இப்படத்தில் ஒரு புதிய பாணியில் திரும்பியிருக்கிறது. துள்ளி விளையாடி நடித்திருக்கிறார். ஏராளமாக நூதனச் சண்டைகள்—நெளிந்த கத்தி, நேரான கத்தி, கட்டாரி, முள் கம்பி- கேடயக் கைச்சண்டை, வாய்ச் சண்டை எல்லா வற்றையும் சரமாரியாகப் பறிமாறியிருக்கிறார். 'தய்யத்தக்கா' ஆட்டம்கூட ஆடியிருக்கிறார். இவரது புலிச்சண்டையின் போது இரண்டொரு இடங்களில் பொம்மைப் புலி தெரிவதானது அவர் சிரமப்பட்டு நிஜப் புலியுடன் மோதும் கட்டங்களை கூட நம்மை மறக்கவைத்து விடுகிறது. உயிர்ப்புள்ள நடிகர் ராமச்சந்திரன், சகிக்கமுடியாத போலி நடிப்பிற்கு இணங்குவது ஏனோ!

சந்திரபாபு பட உயிரோட்டத்தின் இன்னொரு பகுதியாக நடிக்கிறார். அவரது நடிப்பு—என் சண்டையிடும் முறையே அலாதி கால்கள் இரண்டையும் தூக்கி ஒரு மனிதனை உதைத்துவிட்டு மீண்டும் கீழைவைத்துக்கொள்ளும் காட்சியை பார்த்துத்தான் ரசிக்கவேண்டும்.

தங்கவேலுவின் நடிப்பு ஒரே பாணியாக இருந்தாலும் சுவைக்க முடிகிறது.

டி. ஆர். ராஜகுமாரியின் நடிப்பும் புதுமாதிரியாக இருக்கிறது. தன் சொந்தப்படம் என்ற காரணத்தாலோ என்னவே நடனத்தில் தரையில் கூட உருளுகிறார். இவ்வளவுநாள் சொந்தக்குரலில் பாடிய இவருக்கு இப்படத்தில் லீலா குரல் கொடுக்கிறார் இவரை பதினாறு வயதிற்கு மேற்படாத 'கன்னி'யாக மாற்றிய மேக்கப் மேன் ஹரிபாபு நமது தனிப் பாராட்டுதலுக்கு உரித்தாகிறார்.

ராஜசுலோசனாவுக்கு பாகம் அதிகமில்லை. உள்ளபாகத்தை உணர்ந்து வழக்கம் போல 'சிரித்து' நடித்திருக்கிறார்.

ஜி. வரலெட்சுமி கடைசியில் தான் வருகிறார். நன்றாக நடிக்கிறார். அவர்தான் 'குலேபகாவலி'

விஸ்வநாதன் ப. ராமமூர்த்தி இசையமைப்பு நன்றாக இருக்கிறது.

கட்சிஜோடனைகள் பாராட்டும் படி இருக்கின்றன. குறிப்பிடத்தக்கது ஒளிப்பதிவு. ராஜாபாதர் நன்றாகச் செய்திருக்கிறார்.

டைரக்ஷன் ராமண்ணா அவரது முந்திய படங்களைவிட இவ்வளவு முன்னேறி ரசிக்கும்படியான இப்படத்தை எடுத்ததற்காக நமது பாராட்டுதலுக்கு உரியவராகிறார்.

முடிவாக இப்படம் பார்க்க வேண்டாததல்ல. ஆனால் இன்று காசுகுவிப்பதற்கு ஏற்றமுறையில் டப்பாத் தன்மையில் எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படம் தயாரிப்பாளர்களுக்கு **வெற்றி—கலைக்கு நிமிரமுடியாத தோல்வி!** தமிழ் நாட்டு ரசிகத் தன்மை எந்த லட்சணத்தில் இருக்கிறது என்பதற்கும் இந்தப் படம் ஒரு எடுத்துக் காட்டு! எல்லாக்கலைக்கும் மேம்பட்ட **தனிக் கலை** என்று இதற்கு விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ஆனால் இதில் கலை என்று திருப்திப்பட எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. கலை எந்தக் கதியிற் போனாலும் குலேபகாவலியின் மூலம் அதன் கர்த்தர்க்களுக்குக் காசு குவிந்துவிடும் உங்கள் காசும் சேரவேண்டுமல்லவா-போய்ப்பாருங்கள்!

அகிலபர்மாதமிழர் சங்கத்தினரும் பர்மாவாழ் இந்தியர்களும்சேர்ந்து அனுப்பிய அழைப்பின்படி பர்மா சென்றுவர பசும் பொன் திரு. உ. மு தேவரவர்களுக்கு இந்திய அரசாங்கம் அநுமதி அளித்துவிட்டது என்பதையும், தேவரவர்களும், பி. கே. மூக்கையாத் தேவர் எம். எல். எ, அவர்களும், ஆசிரியர் சக்திமோகன் அவர்களும் விரைவில் பர்மா சென்றுவரும் பயணத்தை மேற்கொள்வார்கள் என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

எமது ஏஜண்டுகளுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும், பொதுஜனங்களுக்கும் சுதந்திரத்தினத்தன்று எம்மனம்கனிந்தநன்றி உரித்தாகுக!

ஸ்தாபிதம் 1926

நேம் அண்டு டிசைன் ரிஸ்ஜிடர்டு நிர். 143106

ராஜாபார்லி

போன் நிர். 334

மேலே கண்டுள்ள டிரேட்மார்க் கவர்ண்மெண்டாரால் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இந்த டிரேட் மார்க் நெ 143106.

ராஜா பார்லி பிஸ்கட் கம்பெனி,

புரோப்ரைட்டரான ஸ்ரீ ஏ. சங்குபிள்ளை

அவர்களின் சொந்த உரிமையாகும்.

அறிவிப்பு

மதுரை ராஜாபார்லி பிஸ்கட் கம்பெனியார் எல்லோருக்கும் தெரிவிப்பது என்னவென்றால்:—

எங்கள் டிரேட்மார்க் ரிஜிஸ்டர் நீர் 143106ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ராஜாஅண்டுடிசைன் என்றபதத்தில் எங்களுக்குள்ள பாத்தியத்துக்கு விரோதமாக ராஜாளி என்ற பெயருடன் பிஸ்கட்டு வகையறாக்கள் தயார் செய்து வந்த மதுரை ஏ. செல்லம் கம்பெனி பேரிலும் அதன் பார்ட்டனர்களான ஏ. செல்லம், ஏ. சிதம்பரம் இவர்கள்பேரிலும் மதுரை ஜில்லாகோர்ட்டு ஓ.யஸ் 9–54ல் நாங்கள் வியாஜ்ஜியம் செய்ததில் ஷை செல்லம் கம்பெனியின்உரிமையாளர்கள் தாங்கள் இதுவரை உபயோகித்துவந்த ',ராஜாளி" என்றுபெயர் போட்ட போர்டுகள், ஸ்லைடுகள், லேபில்கள், கவர்கள் வகையறாக்களை உடனே வியாபாரத்திலிருந்து எடுத்துவிட்டதாகவும் இனிமேல் அவ்விதம் செய்வதில்லையென்றும் உறுதிகூறிஷைபிராதின்படி தீர்ப்புசெய்ய சம்மதித்தார்கள் என்ற விவரத்தை இதன்மூலம் நாங்கள் எல்லோருக்கும் தெரியப் படுத்திக் கொள்கிறோம்.

ராஜாபார்லி பிஸ்கட்கம்பெனியார்

115, திண்டுக்கல் ரோடு மதுரை உரிமையாளர்:- ஆ. சங்குபிள்ளை

நேதாஜியை நினைத்தார்களா?

பாக்கியஇலக்குமி

நமது சுதந்திரக் குழந்தைக்கு எட்டு ஆண்டுகள் நிரம்பி, சென்ற 15-8-55உ ஒன்பதாவது ஆண்டும் ஆரம்பமாகிவிட்டது, இந்தக் கொண்டாட்டத்திலே திளைத்திருக்கும் நமது அன்யாகள் உள்ளத்திலே மற்றொன்றை ஞாபகப்படுத்தவும் முற்பட வேண்டியது கடமையாகிறது.

போருக்குப் புறப்படுக என்று அண்ணல் காந்தியார் அவர்கள் அருள்வாக்குக்கொடுத்து அனுப்பிய, அந்த வீரரை நம்நாட்டிவிருந்து விலக்கி பதினான்கு ஆண்டு மறைந்துவிட்டன.

அவரைப்பற்றிய நினைவை நாங்கள் சொல்லும்போது ஒரு சாராருக்கு நல்லநாளிலே எதற்கு நினைவூட்டுகிறார்கள் என்று அங்கலாய்ப்புக் கொள்ளவும் முனைகிறார்கள்.

அவருக்குத்தான் ஒருநாள் ஜெயந்தி கொண்டாடுகிறோமே, அது போதாதா என்றும் கூறி தன்மனத்தைத்திருத்திக் கொள்ளும் போலிவாதிகளும் இருக்கிறார்கள்.

ஆனல் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள்கூட விடுதலை வீரர் நேதாஜிக்கு இந்நாட்டிவிருந்து போகும்போது மங்கலவாழ்த்துப்பாடி வழிஅனுப்பிவிட்டு, அதன்பின் சூழ்நிலைக்கு தக்கவாறு நேதாஜிநேரில் வந்தால் நானே முன்னின்று பேரார் தொடுப்பேன் என்று கூறிய பின், நாட்டுமக்களின் உள்ளத்தைப் புரிந்துகொண்டு ஜே போட்டதையும் யாரும் மறந்திருக்க மாட்டார்களென்றேம்புகிறோம்.

சுதந்திரதின விழாவில் எத்தனைபேர் நேதாஜியைப் பற்றி சிந்தித்திருப்பார்களோ!

[பதிவு எண். எம். 6121]

ஸ்தாபிதம் 1906.

ரிஜிஸ்டர்ட். நிர். 139255

பிலி மார்க் சர்பத்

47, அம்மன் சன்னதி, மதுரை.

ஸ்தாபகர்: K ஒண்டிப்பிலியா பிள்ளை.

புரோப்ரைட்டர்: K ஒண்டிப்பிலியா பிள்ளை சன், K.O. சுப்பிரமணிய பிள்ளை.

வெளியிட்டதும், ஆசிரியரும் ஆர். சக்திமோகன் (ராகவன்) அச்சிட்டது: விஜயா பிரிண்டர்ஸ் லிமிடெட், டவுன் ஹால் ரோடு-கண்ணகி அலுவலகம். 80, மேல ஆவணிமூலவீதி மதுரை.